**மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்**

O.S. No. 71/2022

பெயர் : லலிதா

3.2.2025

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

13.8.2020ஆம் தேதி நான் பிரதிவாதிக்கு ரூபாய் 9,00,000/– கொடுத்ததாகவும், அன்று பிரதிவாதி என்னிடம் ரூபாய் 9,00,000/– பெற்றுக்கொண்டதாகவும் ஒரு Affidavit தயார் செய்யப்பட்டது என்று சொன்னால், ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் அந்த 13.8.2020ஆம் தேதிய Affidavitஆ என்று கேட்டால், எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. எனக்கு ஆங்கிலம் தெரியாது என்பதால் என் வழக்கறிஞரிடம் அந்த Affidavitஐ தமிழில் தயார் செய்து கொடுக்க சொல்லி நான் கேட்கவில்லையா என்று கேட்டால், 1ஆம் பிரதிவாதி மம்தா அந்த Affidavitஐ எனக்கு படித்து காட்டினார், அதை நான் நம்பிவிட்டேன். 1ஆம் பிரதிவாதி மம்தா மைசூரை சேர்ந்தவர் என்று சொன்னால், ஆமாம். 1ஆம் பிரதிவாதி மம்தா மைசூரை சேர்ந்தவர், அவர் 9ஆம் வகுப்புவரைதான் படித்துள்ளார் என்றும், அதனால் அவருக்கும் என்னைபோல் ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது என்றும், அதனால் 1ஆம் பிரதிவாதி அந்த Affidavitஐ எனக்கு படித்து காட்டியதாக சொல்வது பொய் என்று சொன்னால், சரியில்லை. 1ஆம் பிரதிவாதி மம்தா

திருமணத்திற்கு பிறகுதான் மைசூரில் இருந்து ஊட்டிக்கு வந்து செட்டில் ஆகியுள்ளார் என்றும், அதனால் 1ஆம் பிரதிவாதிக்கு தமிழும் எழுத படிக்க தெரியாது என்று சொன்னால், சரியில்லை, அவருக்கு திருமணம் ஆகி 15 வருடங்களுக்கு மேல் ஆகிறது. நான் எங்கு வைத்து 1ஆம் பிரதிவாதி மம்தாவிற்கு ரூபாய் 9,00,000/– கொடுத்தேன் என்று கேட்டால், அந்த Affidavit போடும்போது 1ஆம் பிரதிவாதி மம்தா வீட்டில் வைத்துதான் அவருக்கு ரூபாய் 9,00,000/– கொடுத்தேன். நான் 1ஆம் பிரதிவாதி மம்தாவிற்கு ரூபாய் 9,00,000/– கொடுத்தபோது யார் இருந்தார் என்று கேட்டால், அவருடைய மகனான 2ஆம் பிரதிவாதி சத்தீஷ் இருந்தார், வேறு யார் இருந்தார் என்பது ஞாபகம் இல்லை. நான் 1ஆம் பிரதிவாதி மம்தாவிற்கு ரூபாய் 9,00,000/– கொடுத்தபோது அவர் மகனான 2ஆம் பிரதிவாதி சதீசும் இருந்ததாக கூறுகிறேன், மேலும் கடனை 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் வாங்கியதாகவும் கூறுகிறேன், அதனால் ஏன் அந்த Affidavitல் 2ஆம் பிரதிவாதி சதீசை சேர்க்கவில்லை என்று கேட்டால், 2ஆம் பிரதிவாதி சதீஷ் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வரவில்லை. 22.4.2021 ஆம் தேதிய 2வது Affidavitலும் 2ஆம் பிரதிவாதி சதீஷ் கையொப்பம் போடவில்லை என்று சொன்னால், அவர் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வரவில்லை. 2 Affidavit கள் போட்டபோதும் 2ஆம் பிரதிவாதி சதீஷ் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வரவில்லை. அது எந்த வழக்கறிஞர் அலுவலகம் என்று

கேட்டால், 1ஆம் பிரதிவாதி மம்தா வீட்டிற்கு பின்னாடி இருக்கும் வழக்கறிஞர் திரு.பீமன் அலுவலகம் ஆகும். 2ஆம் பிரதிவாதி சதீஷ் பெங்களூரில் வேலை செய்கிறார் என்று சொன்னால், அப்போது வேலை செய்யவில்லை, தற்போது வேலை செய்கிறாரா என்று தெரியாது. 2ஆம் பிரதிவாதி சதீஷ் பெங்களூரில் இருந்ததால்தான் 2 Affidavitகளிலும் நான் அவரிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றும், அவர் இங்கிருந்தால் 2 Affidavitகளிலும் நான் அவரிடம் கையொப்பம் வாங்கியிருப்பேன் என்று சொன்னால், சரியில்லை அவர் இங்குதான் இருந்தார். 2ஆம் பிரதிவாதி சதீஷ் பொறியியல் படிப்பு படித்துள்ளார் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது. 2ஆம் பிரதிவாதி சதீசை நான் அழைத்து சென்றிருந்தால் Affidavitகளில் ஆங்கிலத்தில் என்ன இருக்கிறது என்பதை அவர் 1ஆம் பிரதிவாதிக்கு படித்து காண்பித்திருப்பார் என்றும், அதனால் நான் 1ஆம் பிரதிவாதியிடம் அவர் பெற்ற ரூபாய் 1,00,000/- கடனின் பாக்கி தொகையை அடைப்பதற்று அவருக்கு அவகாசம் கொடுப்பதாக சொல்லி, 1ஆம் பிரதிவாதியை ஏமாற்றி 2 Affidavit களை பெற்றேன் என்று சொன்னால், சரியில்லை. நான் குன்னூர் நகராட்சி அலுவலகத்தில் சுகாதார துறையில் மருத்துவருக்கு உதவியாளராக பணிபுரிகிறேன். நான் 7 வது படித்துள்ளேன். நான் மாத சம்பளம் ரூபாய் 48,000/- சொச்சம் வாங்குகிறேன். எனக்கு மாத வருமானத்தை தவிர வேறு வருமானம் கிடையாது என்று

சொன்னால், எனக்கு கிடையாது ஆனால் என் வீட்டுக்காரருக்கு உண்டு. பிரதிவாதிக்கு ரூபாய் 14,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு போதிய வருமானம் கிடையாது என்று சொன்னால், சரியில்லை, நான் 2 வீடுகளை வாடகைக்கு விட்டுள்ளேன். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்று கேட்டால், எனக்கு வருமான வரி வருவதில்லை என்றுதான் சொன்னார்கள். என் கணவர் பெயர் குருசாமி. என் கணவர் கட்டிட ஒப்பந்தகாரராக தொழில்புரிகிறார். என் கணவர் தனிப்பட்ட முறையில் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்துள்ளாரா என்று கேட்டால், தாவா கடனைதான் என் கணவர் என்மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்தார். என் கணவர் 1 மற்றும் 2ஆம் பிரதிவாதிகளுக்கு 10.11.2020ஆம் தேதி ரூபாய் 7,00,000/- கடன் கொடுத்ததாக பிரதிவாதிகளுக்கு 22.6.2022ஆம் தேதி ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது. என் மூத்த மகள் பெயர் பிரியா ஆகும். என் மூத்த மகள் பிரியாவிற்கும், பிரதிவாதிகளுக்கும் ஏதாவது வரவு செலவு இருக்கிறதா என்பது எனக்கு தெரியாது. என் மூத்த மகள் பிரியா பிரதிவாதிகளுக்கு ரூபாய் 7,00,000/- கடன் கொடுத்ததாக சொல்லி அதை 22.6.2022ஆம் தேதி பிரதிவாதிகளுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது. என் கணவரும், என் மகள் பிரியாவும் அவர்கள் இருவரும் பிரதிவாதிகளுக்கு தலா ரூபாய் 7,00,000/- கடன்

கொடுத்திருப்பதாகவும் அதையும் சேர்த்து வாங்க வேண்டும் என்றும் என்னிடம் சொல்லவில்லையா என்று கேட்டால், அவர்கள் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தது எனக்கு தெரியாது. எனக்கு பிரதிவாதிகள் கொடுத்த கடனுறுதி சீட்டை வைத்துக்கொண்டு, என் கணவரும், என் மகள் பிரியாவும் பிரதிவாதிகளுக்கு தவறான அறிவிப்பை அனுப்பியுள்ளார்கள் என்று சொன்னால், அது எனக்கு தெரியாது, பிரதிவாதிகள் என்னிடம் பெற்ற கடனை கொடுக்கவேண்டும். என்னிடம் பிரதிவாதிகள் ரூபாய் 14,00,000/- கடன் பெற்றதாக சொல்வது பொய் என்றும், பிரதிவாதிகள் என்னிடம் பெற்ற கடனுக்கு கையொப்பங்கள் போட்டு கொடுத்த பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டை வைத்து நான் அவர்கள் ரூபாய் 14,00,000/- கடன் பெற்றதாக பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்று சொன்னால், சரியில்லை, நான் பொய் வழக்கு போடவில்லை அவர்கள் என்னிடம் ரூபாய் 14,00,000/-மும், ரூபாய் 1,00,000/-மும் கடன் பெற்றது உண்மை. எனக்கு பிரதிவாதிகளுக்கு ரூபாய் 14,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு போதிய வருமானம் இல்லை என்று சொன்னால், எனக்கு வருமானம் இருந்தது, ஒரு வீட்டை விற்றும், ஒரு வீட்டை போக்கியத்திற்கு கொடுத்தோம். நான் 1ஆம் பிரதிவாதியை ஏமாற்றி 2 Affidavit களை எழுதி வாங்கிக்கொண்டேன் என்றும், அதனால் இது பொய்யான வழக்கு, வழக்கை தள்ளுபடி செய்ய

வேண்டும் என்று சொன்னால், பொய்யான வழக்கு இல்லை, வீடியோ ஆதாரம் இருக்கிறது, என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

N.
MURALIDHARAN

Digitally signed
by N.
MURALIDHARAN
Date: 2025.02.03
17:02:53 +0530